# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8213057

1. District / மாவட்டம் : திருச்சி மாவட்டம் PS / காவலநிலையம்: லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு Year / ஆண்டு: 2024 FIR No. / மு.த.அ. எண்: 1/2024 Date / நாள்: 22.1.2024

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: 7(a)

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : Nil

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from / நாள் முதல் : 22.01.24 Date to / நாள் வரை :

   Time Period / நேர அளவு : Time from / நேரம் முதல் : 1130 hrs. Time to / நேரம் வரை :

   (b) Information Received at PS. Date / காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 22.01.24 Time / நேரம் : 1700 hrs.

   (c) General Diary Reference : Entry No(s) / பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time / நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் கொம்பனூர் சுமார் 65 KM தெற்கு

   Beat Number / முறைக் காவல் எண் : — (b) Address / முகவரி : —

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District / மாவட்டம் :

6. Complainant /Informant (a) Name / குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : M. கருப்பன் (b) Father's/ Husband's Name / தந்தை / கணவர் பெயர் : பொன்னையன்

   (c) Date / Year of Birth / நாள் / பிறந்த ஆண்டு : 1975 (d) Nationality / நாட்டினம் : இந்தியன் (e) Passport No. / வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் :

   Date of Issue / வழங்கப்பட்ட நாள் : Place of Issue / வழங்கப்பட்ட இடம் :

   (f) Occupation / தொழில் : விவசாயம் (g) Address / முகவரி : 2/87, கம்பத்துப்பட்டி, கொம்பனூர் மணப்பாறை (வட்டம்), திருச்சி மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு செல்வராஜ் கிராம நிர்வாக அலுவலர், கொம்பனூர் கிராமம், திருச்சி மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் : தாமதமில்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………..on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் …………………………… பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு …………………………………………. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

N. [signature] 22.1.24

G. [signature] 22.01.2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
(G. SANTHAVEL)
Inspector of Police
V & AC Trichy

15. Date & Time of despatch to the court: 22.01.2024
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 1745 Hrs.

Name: பெயர் …………………………
Rank: நிலை …………………No. எண் ………

**கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**

**திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.1/2024–இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.......**

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 22.01.2024 பணியில் இருந்த போது மாலை 17.00 மணியளவில் திருச்சி மாவட்டம், மருங்காபுரி தாலுக்கா, வேம்பனூர் கிராமம், கல்தோண்டி, கதவு எண்.2/87 என்ற முகவரியில் வசித்து வரும் மோலையன் மகன் திரு.கருப்பன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அனுமதி பெற்று அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை ரகசியமாக செய்து, புகார்மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி மாவட்டம், மருங்காபுரி தாலுக்கா, வேம்பனூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.சோலைராஜ் மற்றும் புகார்தாரர் திரு.கருப்பன் ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்து எதிரியின் கெட்ட நடத்தையை உறுதி செய்துகொண்டு, பின்னர் இன்று 22.01.2024 மாலை 19.00 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.1/2024 சட்டப்பிரிவு 7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)–ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபாம் பின்வருமாறு. திருச்சி 22.01.2024 அனுப்புநர் கருப்பன், வயது 48, த/பெ. மோலையன், 2/87, கல்தோண்டி, வேம்பனூர் கிராமம், மருங்காபுரி தாலுக்கா, திருச்சி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அய்யா அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை காவல் நிலையம், திருச்சிராப்பள்ளி. ஐயா, நான் மேற்கண்ட விலாசத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான், கூலி வேலை செய்து வருகிறேன். நான் கடந்த 1997ஆம் ஆண்டு மருங்காபுரி ஜமீன்தார் கிருஷ்ண விஜய புச்சியநாயக்கரின் மகன் திரு.ராஜகோபால் என்பவரிடமிருந்து 1 ஏக்கர் 20 செண்ட் புன்செய் நிலத்தை ரூ.10,000/–ற்கு கிரையம் பெற்று அதை துவரங்குறிச்சி சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 29.12.1997ந் தேதியில் ஆவண எண்.1191/1997ன்படி எனது பெயரில் பதிவு செய்தேன். மேற்படி இடத்தில் ஒரு கெட்டி மெத்தை வீடு கட்டி எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். மேற்படி கிரையம் பெற்ற இடம் கூட்டு பட்டாவாக இருந்ததால் எனது பெயரில் தனிப்பட்டா பெறவேண்டி கடந்த 26.09.2023ந் தேதியன்று வட்டாட்சியர், மருங்காபுரி தாலுக்கா, திருச்சி மாவட்டம் அவர்களுக்கு கிரையப்பத்திர நகல் மற்றும் இதர ஆவணங்களுடன் இணையவழியில் பட்டா மாறுதலுக்கான விண்ணப்பம் செய்தேன். கடந்த 20.12.2023ந் தேதியன்று விண்ணப்ப நிலை குறித்து இணையதளத்தில் பார்த்தபோது மேற்படி எனது விண்ணப்பம் மருங்காபுரி மண்டல துணை வட்டாட்சியரால் நிராகரிக்கப்பட்டிருந்தது. பின்னர் கடந்த 19.01.2024ந் தேதியன்று இ சேவை மையம் மூலமாக பட்டா மாறுதல் கோரி சேவை கட்டணம் ரூ.60/– செலுத்தி கோரப்பட்ட ஆவணங்களுடன் மீண்டும் விண்ணப்பித்திருந்தேன். பின்னர் இன்று 22.01.2024ந் தேதி

ஊனையூரில் உள்ள கம்ப்யூட்டர் சென்டரில் எனது விண்ணப்ப நிலை குறித்து பார்த்தபோது, பட்டா மாறுதலுக்கான விண்ணப்பம் கிராம நிர்வாக அலுவலரிடம் நிலுவையில் இருப்பதாக தெரியவந்தது. உடனே எங்கள் வேம்பனூர் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் காலை சுமார் 11.30 மணியளவில் சென்று வி.ஏ.ஓ. திரு.சோலைராஜ் அவர்களை சந்தித்து எனது பட்டா மாறுதலுக்கான விண்ணப்பம் குறித்து விபரம் கேட்டபோது, என்னிடமிருந்த கிரையப்பத்திரம், இணையவழி பட்டாமாறுதலுக்கான விண்ணப்பம், ஆதார்கார்டு, ரேசன்கார்டு ஆகியவைகளின் நகல்களை வாங்கி பார்த்துவிட்டு, உங்க மனு என்னிடம் தான் நிலுவையில் இருக்கு. நான் ஏற்பாடு பண்ணி அனுப்பிவச்சாதான் உங்களுக்கு தனிப்பட்டா கிடைக்கும். உங்களுக்கு பட்டா கிடைக்கினும்னா எனக்கு தனியா பத்தாயிரம் ரூபாய் கொடுத்திருங்க என்று கேட்டார். நான் எதுக்கு சார் இவ்வளவு பணம் என்று கேட்டேன். அதற்கு அவர் 1997ல் வாங்கிய இடத்துக்கு இப்ப வந்து தனிப்பட்டா கேட்கற, நிறையா வேலை இருக்குப்பா, ரூபா பத்தாயிரம் கொடுத்தாதான் உனக்கு பட்டா கிடைக்க ரெக்கமண்ட் பண்ணுவேன் என்று கண்டிப்பாக கூறினார். அதற்கு நான் அவரிடம், நானே கூலி வேலைக்கு போய்தான் என் குடும்பத்த கவனிச்சுக்கிறேன், பத்தாயிரம் ரூபா என்னால ரெடி பண்ண முடியாது சார், பணம் இல்லாம முடிச்சு கொடுங்க சார் என்று சொன்னேன். அதற்கு வி.ஏ.ஓ. திரு.சோலைராஜ் அவர்கள் கூலி வேலை பார்க்கிறேன்னு சொல்றிங்க வேணும்னா மூவாயிரம் கொறச்சி, ஏழாயிரம் கொடுத்திடுங்க, இதுக்குமேல கம்மி பண்ண முடியாது என்றும், இல்லன்னா உங்க அப்ளிகேசன் திரும்பவும் ரிஜக்ட் ஆகிடும் என்று வற்புறுத்தி சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை, இருந்தாலும், அப்போதைக்கு அவரிடம், சரிங்க சார் பணம் ஏற்பாடு பண்ணிட்டு வந்து பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வந்துவிட்டேன். எனது பெயருக்கு தனிப்பட்டா கிடைக்க ஏற்பாடு செய்வதற்கு ரூ.7,000/– லஞ்சம் கேட்ட வேம்பனூர் வி.ஏ.ஓ. திரு.சோலைராஜ் என்பவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd.xxx (M.கருப்பன்) 22.1.24 Submitted to the Court of Hon'ble Special Judge, Special Court for Prevention of Corruption Act 1988, Trichy. Received this report at 17.00 hrs. on 22.01.2024 and made Preliminary Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.1/2024 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018) at 19.00 hrs. on 22.01.2024. Sd.xxx (G.SAKTHIVEL) 22.01.2024 Inspector of Police, V&AC, Trichy.

G. [signature] 22.01.2024

INSPECTOR OF POLICE
VIGILANCE AND ANTI - CORRUPTION
TRICHYRAPPALLY